கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்
மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

எம்சிஓபி. நெ.248/2017

2023 ம் ஆண்டு 07.02.2023 ம .சா.1 கலைவாணி

குறுக்கு விசாரணை 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மசாஆ.1 ன் படி சரக்கு வாகனம் என்பதால் பயணிகள் 6 பேர் பயணித்தார்கள் என்றால் ஆமாம். அதில 3 நபர்கள் கேபினில் பயணித்தார்கள் என்றால் ஆமாம். கேபினில் பயணித்தால் ஓட்டுனருக்கு இடைஞ்சல் என்றால் சரிதான். மசாஆ.3 ன் படி ஓட்டுனருக்கு உரிமம் இல்லை என்று உள்ளது என்றால் தெரியவில்லை. மசாஆ.4 ன் படி விபத்து ரோட்டின் மையப்பகுதியில் நடந்ததாக உள்ளது என்றால் ஆமாம். கிடாவெட்டிற்கு போய்விட்டு வரும்போது விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரோக்கியராஜ் மது அருந்தி விட்டு வாகனத்தை ஓட்டினரா என்பது தெரியவில்லை. மசாஆ.14, 15 ஐ வழக்கிற்காக மிகைப்படுத்தி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இறந்த என் தாயாரின் வயது மசாஆ.7 ன் படி 46 என்றால் சரிதான். மசாஆ.10 வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அசல் கொண்டு வந்துள்ளேன். விபத்து 1 ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடந்துள்ளது என்றும் பாலிசி விதிமீறல் இருப்பதால் இழப்பீடு தொகையை 1, 2 எதிர்மனுதாரர்களிடம் கோரமுடியும் என்றால் சரியல்ல. இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

ஒப்பம்/எஸ்.நாகராஜன்
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
தாராபுரம்.